DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.564 / 2016 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 5 |
| Name | : கருப்பையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2024.

--------

1ம் எதிரி ஆஜர், 4வது எதிரி இறப்பு குற்றச்சாட்டு அற்றுவிட்டது. 2, 3, 5, 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வட்டாட்சியர் பயிற்சியில் உள்ளேன். சம்பவத்தின்போது அத்திபட்டி கிராமத்தில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 29.08.2016 இரவு 08.45 மணியளவில் பாறைப்பட்டிக்கு வடக்குபக்கம் சந்திரன் தோட்டத்தில் நானும் எனது தலையாரி பாலுவும் சென்றோம். அங்கு 7 பேர் இருந்தார்கள். உடன் காவல் துறையை சேர்ந்தவர்களும் இருந்தார்கள். எதிரிகள் கலசம் திருடுவதற்காக ஆலோசனை செய்கிறார்கள் என்று போலிசார் சொன்னார்கள். அப்போது போலிசார் எங்கள் முன் பொருட்களை கைப்பற்றினார்கள். அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.1. அதிலுள்ள இன்னுமொரு கையெழுத்து தலையாரி பாலுவினுடையது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள

கையெழுத்து என்னுடையது தான். அ.சா.ஆ.2. அதிலுள்ள இன்னுமொரு கையெழுத்து தலையாரி பாலுவினுடையது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

பொருட்களை கைப்பற்றும்போது போட்டோ எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. எதிரிகளின் செல்போன்களை போலிசா˙ கைப்பற்றினார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எம்.கல்லுப்பட்டி காவல் நிலையத்திற்கு நான் சென்றேன். நான் இரவு சுமார் 9.00 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். நான் கையெழுத்து செய்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவை் லேப்டாப்பில˙ டைப˙ செய்யபட்டவை. அதில் தான˙ நான˙ கையெழுத்து செய்தேன். இந்த 2 கையெழுத்தை தவிர வேறு கையெழுத்து எதுவும் நான் போடவில்லை. பேரையூர் தாலுகாவில் 6 ஆர்.ஐ இருக்கிறார்கள். டி.கல்லுப்பட்டி, மோதகம், பேரையூர், சேடப்பட்டி, அத்திபட்டி, எழுமலை ஆகும். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளவா் எழுமலை ஆர்.ஐ. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள துள்ளுகுட்டிநாயக்கன்பட்டி, எம்.கல்லுபட்டி, டி.பாறைப்பட்டிக்கு எல்லாம் தனியாக வி.ஏ.ஓ. மற்றும் தலையாரி உள்ளார்கள். அத்திபட்டிக்கு காவல் நிலையம் சாப்டூரில் உள்ளது. சம்பவ இடத்திற்கும் அத்திப்பட்டிக்கும் சுமார் 7, 8 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு ஆய்வாளர் தான் போன் செய்து வரச்சொன்னார் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியை யார் தயாரித்தார்கள் என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். எனது அலுவலகம் அத்திப்பட்டியில் உள்ளது. குற்ற வழக்கு சம்பந்தமாக காவல் துறையினா் அழைக்கும்போது மேலதிகாரிகளிடம் கூறவேண்டும் என்றால் சரிதான். நான் வட்டாட்சியரிடம் போன் மூலம் தெரிவித்தேன். நான் வழக்கிற்காக போன் மூலமாக தெரியப்படுத்தியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை எத்தனை பக்கங்கள் என்று என்னால் கூறமுடியாது. நான் கூறியது

போன்று சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து காவல் துறையினருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.12.05 15:39:49 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.